
புரட்சிப்
# பெரியார் முழக்கம்

www.dvkperiyar.com

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு | ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | PURATCHI PERIYAR MUZHAKAM

• திருவள்ளுவர் ஆண்டு 2056 • நவம்பர் 06 2025 • புரட்சி 25 • முழக்கம் 43 • விலை ரூ.6.00 (Price: Rs 6)



# ஆர்.எஸ்.எஸ். கூடாரமாகிறதா அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்?

## அப்பாவி மாணவர்களின் கல்வி உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்

சென்னை தரமணியில் உள்ள அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தில், 2024-ஆம் ஆண்டு ஜூலை 4-ஆம் தேதி ஆர்.எஸ்.எஸ்-ஸை சேர்ந்த இருவர் உள்ளே நுழைந்து, அரசியலமைப்பு சட்டத்திற்கு எதிரான ஆவணங்களைக் கையில் வைத்துக்கொண்டு மாணவர்களிடையே ஜாதிய மதவாத நச்சுக் கருத்துக்களைப் பிரச்சாரம் செய்தனர். குறிப்பாக, ஏ.பி.வி.பி-யின் அகில இந்திய மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைக் கையில் வைத்துக்கொண்டு, நாங்குநேரியில் தலித் சமூகத்தைச் சேர்ந்த மாணவர் சின்னதுரை ஆதிக்க ஜாதிவெறி கொண்ட மாணவர்களால் தாக்கப்பட்டவுடன் தமிழ்நாடு அரசால் நீதிபதி சந்துரு தலைமையில் அமைக்கப்பட்ட ஒரு நபர் கமிட்டியின் பரிந்துரையை விமர்சித்தும், அந்த அறிக்கை இந்துக்களின் மத உணர்வுகளுக்கு எதிரானது என்றும் பிரச்சாரம் செய்துள்ளனர். இதனை அறிந்துகொண்ட சட்டக்கல்லூரி மாணவர்கள், குறிப்பாக சமூக அக்கறைகொண்ட, அரசியல் உணர்வு கொண்ட மாணவர்கள் (தமிழ்நாடு மாணவர் கழகம், இந்தியா மாணவர் சங்கம், புரட்சிகர மாணவர் இளைஞர் முண்ணனி) கல்லூர்ri மாணவர்கள் நேரில் சென்று ஆர்.எஸ்.எஸ் குண்டர்கள் இருவரையும் விசாரித்தனர்.

விசாரிக்கும் போது அதிர்ச்சியளிக்கும் விவரங்கள் வெளிவந்தது. அந்த குண்டர்களின் கையிலிருந்த டைரியில் பல்கலைக்கழகத்தின் ஆண்கள் மற்றும் பெண்களின் கழிவறைக்குச் செல்வதற்கான வழி, சில மாணவர்களின் பெயர்கள் என பல்கலைக்கழகத்தின் மொத்த உள்கட்டமைப்பின் வரைபடமும் இருந்தது. இதுபோல் சென்னையில் இருக்கும் மூன்றுக்கும் மேற்பட்ட கல்லூரியின் விவரங்கள் இருந்துள்ளது. நிலைமையின் தீவிரத்தை உணர்ந்துகொண்ட மாணவர்கள், உதவிப் பேராசிரியர் ஹாசன் அவர்களுக்கு தகவல் தெரியப்படுத்தி குறிப்பிட்ட இடத்திற்கு வருமாறு அழைத்தனர். உடனடியாக உதவிப் பேராசிரியர்கள் இருவர் (ஹாசன், ஜெய்சங்கர்) நேரில் வந்து ஆர்.எஸ்.எஸ் குண்டர்களை விசாரித்தனர். அப்போது சட்டக்கல்லூரி மாணவர் ஒருவரின் சட்டையைக் கிழித்து ஆர்.எஸ்.எஸ் குண்டர் ஒருவர் தாக்குதலிலும் ஈடுபட்டார். சிறிய சலசலப்பிற்குப் பின் மாணவர்கள் பல்கலைக்கழக நிர்வாகத்திடம் இருவரையும் ஒப்படைத்து அவர்கள் மீது போலீசில் வழக்குத் தொடுக்குமாறு வலியுறுத்தினர்.

ஆனால் தலைகீழாக, அதன்பிறகு நடந்தது அனைத்தும் ஜனநாயக விரோதமான ஒடுக்குமுறைதான். சட்டக் கல்லூரி மாணவர்கள் சிறைப்படுத்திக் கொடுத்த ஆர்.எஸ்.எஸ் குண்டர்களின் மீது போலீசில் வழக்குத் தொடுக்காமல் அவர்களைப் பாதுகாக்க முயற்சி செய்துள்ளது பல்கலைக்கழக நிர்வாகம். நீண்ட நேரம் காத்திருந்த நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள், நிர்வாகம் திட்டமிட்டே காலம் தாழ்த்துவதை அறிந்துகொண்டு போராட்டத்தில் இறங்கினர். இப்போராட்டம் ஐந்து மணி நேரத்திற்கும் மேலாக நடந்துள்ளது. ஆனாலும் போராடிய மாணவர்களின் தடுப்பையும் மீறி பல்கலைக்கழகத்தின் மகிழுந்தில் போலீசு பாதுகாப்புடன் ஆர்.எஸ்.எஸ் குண்டர்கள் அழைத்துச் செல்லப்பட்டு எந்தவித வழக்கும் விசாரணையும் இன்றி விடுவிக்கப்பட்டனர். இதனையும் கண்டித்து போராட்டத்தைத் தொடர்ந்த மாணவர்களிடம் பல்கலைக்கழக நிர்வாகம் போராட்டத்தைக் கலைக்கும் நோக்குடன் கண்துடைப்புக்காக ஒரு விசாரணை கமிட்டி அமைப்பதாகவும், ஐந்து நாட்களுக்குள் அந்த அறிக்கையின் அடிப்படையில் வழக்குத் தொடுப்பது குறித்து முடிவு செய்யலாம் என்றும் துணைவேந்தர் சந்தோஷ் குமார் நேரடியாக வந்து வாக்குறுதியளித்தார். மாணவர்கள் நிர்வாகத்தின் கயமைத்தனத்தைப் புரிந்துகொண்டு எழுத்துப்பூர்வமாக ஒரு கடிதத்தையும் பல்கலைக்கழக நிர்வாகத்திடம் ஒப்படைத்தனர்.






பல்கலைக்கழகம் கொடுத்த வாக்குறுதியின் அடிப்படையில் உதவிப் பேராசிரியர் விஜயலட்சுமி தலைமையில் நான்கு பேர் கொண்ட விசாரணை கமிட்டி அமைக்கப்பட்டது. ஆனால் விசாரணை தொடங்குவதற்கு முன்பே, மாணவர்கள் மறுநாள் பல்கலைக்கழகத்தில் காலை நுழையும் போதே ஒரு அறிவிப்பு வெளியிடப்பட்டது, அந்த அறிவிப்பு பல்கலைக்கழக சுவர்களில் பரவலாக ஒட்டவும் பட்டது. “பல்கலைக்கழக வளாகத்திற்குள் கலவரத்தில் மற்றும் இத்தகைய செயல்பாடுகளில் ஈடுபடும் மாணவர்கள் தேர்வு எழுதுவதில் இருந்து விலக்கி வைக்கப்படுவதோடு, சீர்மிகு சட்டப் பள்ளியில் இருந்து நிரந்தரமாக நீக்கப்படுவார்கள்” என்ற சூழ்ச்சி நிறைந்த இந்த அறிவிப்பு போராடிய மாணவர்களுக்கு எதிரான மிரட்டல், பல்கலைக்கழக ஜனநாயகத்திற்கு வெட்டப்பட்ட படுகுழி. குறிப்பாக இரகசியமாக பல்கலைக்கழக வளாகத்தில் நுழைந்து சாதி மற்றும் மதவெறி பிரச்சாரம் செய்த ஆர்.எஸ்.எஸ் குண்டர்களைப் பாதுகாக்க பல்கலைக்கழக நிர்வாகம், நடந்தது ‘சட்டக் கல்லூரி மாணவர்களிடையே மோதல்’ என திரித்து திசைதிருப்பும் சூழ்ச்சியைச் செய்தது.

விசாரணை தொடங்குவதற்கு முன்பே வெளியிடப்பட்ட அறிவிப்பு பல்கலைக்கழக நிர்வாகத்தின், குறிப்பாக துணைவேந்தர் சந்தோஷ் குமாரின் சங்கித்தனத்தை வெட்ட வெளிச்சமாக்கியது. பல்கலைக்கழகத்தில் முற்போக்கு மாணவர் அமைப்புகள் மற்றும் சட்டக்கல்லூரி மாணவர்கள் இணைந்து நடத்தி வந்த “எரிதழல்”, “ஜெய் பீம்” போன்ற வாசகர் வட்டத்தை நடத்துவதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. விளையாட்டு மைதானத்தில் இருக்கும் கேலரி (GALLERY) மூடப்பட்டது. அம்பேத்கரின் “விசாவுக்காக காத்திருக்கிறேன்” என்ற நூலை மாணவிகள் படித்து விவாதித்துக் கொண்டிருந்த போது நூல் பறிக்கப்பட்டு “இதற்கெல்லாம் யார் அனுமதி கொடுத்தது” என்று மிரட்டப்பட்டார்கள். அடக்குமுறைகளை எதிர்கொள்ள முடியாமல் குறிப்பாக தேர்வு காலமும் நெருங்கியதால் போராடவும் வாய்ப்பு இல்லாமல் இப்போது வரை வாசகர் வட்டங்கள் பல்கலைக்கழகத்திற்கு அருகில் இருக்கும் பூங்காவில் நடத்தப்படுகிறது. மேலும், இந்தக் கல்வியாண்டு முழுவதும் இப்போராட்டத்தில் முன்னணியில் இருந்த மாணவர்கள் குறிவைக்கப்பட்டு நிர்வாகத்தால் பல்வேறு முனைகளில் நெருக்கடிக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

### பல்கலை. நிர்வாகத்தின் பழிவாங்கும் படலம்

2025 - கல்வியாண்டின் முதல் இரண்டு மாதங்களுக்குப் பிறகு, போராட்டத்தில் முன்னணியில் இருந்த மாணவர்கள் குறிவைக்கப்பட்டு பல்வேறு காரணங்களுக்காக இடைநீக்கம் செய்யப்பட்டனர். தற்போது உண்ணாநிலை போராட்டத்தில் இருக்கும் ஒன்பது மாணவர்களில் 4 பேர் 60 நாட்களுக்கும் மேலாக இடைநீக்கம் செய்யப்பட்டு வஞ்சிக்கப்பட்டுள்ளனர். விசாரணைக் கமிட்டிகள் அமைத்து விசாரணை என்ற பெயரிலும், விளக்கக் கடிதங்கள் கேட்டும் துன்புறுத்துவதன் மூலம் மன ரீதியாகவும் தாக்கப்படுகின்றனர். அக்டோபர் மாத தொடக்கத்தில் தொடர்ச்சியாகத் துன்புறுத்தப்படும் மாணவர் ஒருவர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார். பதில் சொல்ல வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்ட பல்கலை நிர்வாகம், வெறி தலைக்கேறி போராட்ட முன்னணியில் இருந்த ஒன்பது மாணவர்களைக் குறிவைத்து, அவர்கள் மீது பல்வேறு குற்றச்சாட்டு இருப்பதாகக் கூறி (ஆர்.எஸ்.எஸ் குண்டர்களுக்கு எதிரான போராட்டத்தை இந்த ஒன்பது பேரும் சக மாணவர்கள் மீது கொலைவெறி தாக்குதல் நடத்தியதாகக் கூறி திரித்து இணைத்தனர்) விசாரணைக் கோரினர்.

பல்கலைக்கழக நிர்வாகத்தின் மிகவும் இழிவான பொய்க் குற்றச்சாட்டுகளை விசாரிக்க அவர்களே மூத்த வழக்கறிஞர் சிங்காரவேலர் தலைமையில் ஒரு நபர் ஆணையம் அமைத்தனர். இந்த ஒரு நபர் ஆணையம் அமைக்கப்பட்டதும், விசாரணைகளும் திட்டமிட்டே இந்த கல்வியாண்டின் முதல் பருவத் தேர்வுகள் தொடங்கும் காலத்தில் முன்தள்ளப்பட்டது. இவையெல்லாம் முழுக்க முழுக்க ஒன்பது பேரையும் தேர்வு எழுத விடாமல் இறுதி நேரத்தில் நீதிமன்றத்திற்கும் செல்ல முடியாமல், போராடவும் முடியாமல் வாயடைக்கப்பட்டு கைகளும் கட்டப்பட்டு, கழுத்தறுப்பது போல் இடைநீக்கம் செய்வதற்கான திட்டம்.

ஆர்.எஸ்.எஸ் குண்டர்களுக்கு எதிராக என்று சொல்லிக்கொள்ளப்பட்டு 2024 - ல் அமைக்கப்பட்ட உதவிப் பேராசிரியர் விஜயலட்சுமி தலைமையிலான விசாரணைக் கமிட்டியின் அறிக்கை ஒரு ஆண்டுக்குப் பிறகு இப்போது சிங்காரவேலர் தலைமையிலான ஒரு நபர் ஆணையத்தின் தாக்குதலுக்குத் துணையாக வெளியிடப்பட்டது. (உதவிப் பேராசிரியர் ஒரு நபர் ஆணையத்தின் குறுக்கு விசாரணையின் போது, தான் விசாரணைக் கமிட்டியின் அறிக்கையை 2024 -ஆம் ஜீன் மாதமே துணைவேந்தரிடம் ஒப்படைத்துவிட்டதாகத் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது) அந்த அறிக்கையும் உண்மைகளைக் குழி தோண்டி புதைத்துவிட்டு வெறும் பொய்யால் கட்டமைக்கப்பட்ட அறிக்கை.

இறுதியாக அவர்கள் திட்டமிட்ட முறையில் ஒரு நபர் ஆணையம் அக்டோபர் மாதம் கூடியது. ஒன்பது மாணவர்களும் வழக்கறிஞர் திருமூர்த்தி அவர்களின் தலைமையில் புகைப்படம் மற்றும் எழுத்துப்பூர்வமாக இருந்த ஆதாரங்களை ஒப்படைத்து தங்களது கருத்துக்களை முன்வைத்தனர். ஆனால் ஒன்பது பேரும் சக மாணவர்களின் மீது கொலைவெறித் தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படும் பொய்யை அறிக்கை மீண்டும் வலியுறுத்தியது. வெளியிலிருந்து வந்த நபர்கள் (ஆர்.எஸ்.எஸ் குண்டர்கள்) அட்மிஷனுக்காக உள்ளே வந்து மாணவர்களிடையே பேசியதாகத் தெரிந்த உண்மையை மறைத்து திரிக்கிறார்கள். (உதவிப் பேராசிரியர் விஜயலட்சுமி தலைமையிலான கமிட்டியின் அறிக்கையில் அரசியல் அமைப்பு சட்டத்திற்கு எதிரான ஆவணங்கள் அந்த குண்டர்களின் கையிலிருந்தது என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.)

ஆர்.எஸ்.எஸ் குண்டர்களில் ஒருவர் விவேகானந்தர் புகைப்படம் வைத்திருந்தாக அறிக்கையில் சொல்லப்படுகிறது. விவேகானந்தர் புகைப்படம் வைத்திருப்பவருக்கும் நியாயம் கற்பிக்கப்பட்டு, கூடுதலாக விவேகானந்தர் வரலாறும் விரிவாக அறிக்கையில் எழுதப்பட்டுள்ளது. “குற்றச்சாட்டுகள் உறுதிப்படுத்தப்பட்ட அறிக்கையின் அடிப்படையில் ஏன் உங்களை இடைநீக்கமோ, பல்கலைக்கழக மாணவர் பட்டியலிலிருந்து நிரந்தர நீக்கமோ செய்யக் கூடாது” என்று விளக்கம் கேட்டு கடிதம் அனுப்பியுள்ளது பல்கலைக்கழக நிர்வாகம்.” மாணவர்களின் உரிமைகளுக்காகவும், பறிக்கப்படும் பல்கலைக்கழக ஜனநாயகத்தைப் பாதுகாக்கவும், நிர்வாக அடக்குமுறைக்கு எதிராகவும் தொடர் போராட்டத்தில் இருக்கும் ஒன்பது மாணவர்களையும் இறுதியாக தேர்வு எழுத விடாமல் முடக்கும் பல்கலைக்கழகத்தின் சதியை எதிர்த்துத்தான், சட்ட ரீதியாகவும், களத்தில் உண்ணாநிலை போராட்டத்தையும் தற்போது மாணவர்கள் முன்னெடுத்துள்ளனர். தமிழ்நாடு அரசும், சட்டத்துறை அமைச்சரும் உடனடியாக மாணவர்களின் எதிர்காலக் கல்வியை உறுதி செய்ய வேண்டும். அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் ஆர்எஸ்எஸ் கூடாரமாக்கப்படுவதைத் தடுத்த நிறுத்த வேண்டும்.

**(வினவு தளத்தில் வெளியான செய்தியில் இருந்து)...**

தலையங்கம்

# மற்றுமொரு ஜனநாயகப் படுகொலை!

பீகாரில் சிறுபான்மையினர், தாழ்த்தப்பட்டவர்கள், புலம்பெயர் தொழிலாளர்கள், பெண்கள் என ஆளும் பாஜக கூட்டணிக்கு வாக்களிக்க எண்ணமில்லாதவர்கள் 65 லட்சம் பேரை நீக்கிய கையோடு தமிழ்நாடு விரைந்திருக்கிறது தேர்தல் ஆணையம். இதற்குப் பெயர் வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தம் (எஸ்.ஐ.ஆர்.). வாக்காளர் பட்டியலில் ஆட்களை குறைப்பதோ, சேர்ப்பதோ அரசியல் கட்சிகளின் பிரச்னை, தேர்தல் அரசியலில் பங்கெடுக்காத அமைப்புகளுக்கு அதைப்பற்றி என்ன கவலை என்று ஒதுங்கிவிட முடியாது. இது அப்பட்டமான ஜனநாயகப் படுகொலை.

நீதித்துறையைக் கைப்பற்றுதல், அமலாக்கத்துறையைத் தன்வயப்படுத்துதல், எதிர்க்கட்சிகளை அழித்து அரசியல்வாதிகளை - சட்டமன்ற உறுப்பினர்களை - மக்களவை உறுப்பினர்களை விலைக்கு வாங்குதல் என்பன போன்ற பாஜக ஆட்சியின் சர்வாதிகாரப் போக்குகள் இப்போது, ‘மக்களைத் தகுதிநீக்கம் செய்தல்’ என்ற இடத்திற்கு நகர்ந்திருக்கிறது. இந்தத் திருநாட்டில் வாக்காளர் பட்டியல் ஒன்றைத் தவிர வேறெங்கும் அனைவரும் சமமானவர்கள் இல்லை. சேரியை விட ஊர் மேலானது, ஊரை விட அக்ரஹாரம் மேலானது என்ற மோசமான வருணாசிரம கட்டமைப்புக்குள்தான் இந்தியச் சமூகம் சுழன்று கொண்டிருக்கிறது. ஒருகாலத்தில் அக்ரஹாரத்தில் இருந்தவர்களுக்கும், ஊர் தெருவுக்குள் இருந்த குறிப்பிட்ட சில செல்வந்தர்களுக்கும் மட்டும்தான் வாக்குரிமை இருந்தது. அதிலும் கூட 30% மக்கள் வாக்களித்தாலே ஆச்சரியம்தான்.

வட்டமேசை மாநாட்டில் புரட்சியாளர் அம்பேத்கர் அனைவருக்குமான வாக்குரிமையை வலியுறுத்தியதால்தான், 1950-இல் இந்தியாவில் எல்லோருக்கும் வாக்களிக்கும் உரிமை முதன்முறையாக கிடைத்தது. குறிப்பாக தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், பெண்கள் இந்தியா முழுவதும் வாக்குரிமை பெற்றது அப்போதுதான்.

சென்னை மாகாணத்தில் மட்டும் 04.7.1921-இல் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கத் தீர்மானம் கொண்டுவரப்பட்டு, இன்றைய ஆளுநர்களைப் போலவே அன்றைய ஆளுநர்களாலும் மசோதா கிடப்பில் கிடந்து, ஒருவழியாக 1926-இல் சட்டமானது. ஆனாலும் அனைத்து பெண்களுக்குமான வாக்குரிமை அப்போது கிடைத்துவிடவில்லை.

ஆக, 1937-க்கு முன்பிருந்த நிலைமையை முற்றுமுழுதாக அடைந்துவிட முடியாது என்றபோதிலும், ஆர்.எஸ்.எஸ்-ஸின் 5 எதிரிகளில் இஸ்லாமியர்கள், கிறிஸ்துவர்களை மட்டும் பெரிய அளவில் குறிவைத்து வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்குவதுதான் எஸ்.ஐ.ஆர். முயற்சி. பா.ஜ.க.வுக்கு குறுகிய காலப் பலனளிக்கும் வகையில் ஒவ்வொரு மாநிலத்திலும் எதிர்க்கட்சி வாக்குகளை நீக்குவதும் இதில் அடங்கும். ஒட்டுமொத்தத்தில் குடியுரிமை திருத்தச் சட்டத்தின் மற்றொரு வடிவமாகத்தான் இந்த எஸ்.ஐ.ஆர். வந்திருக்கிறது. தமிழ்நாடு உட்பட 10 மாநிலங்களில் நவம்பர் 4-ஆம் தேதி எஸ்.ஐ.ஆர். பணிகளைத் தொடங்கியிருக்கிறது தேர்தல் ஆணையம்.

தற்போது உள்ள வாக்காளர் பட்டியல் முழுமையாகக் கைவிடப்பட்டு, புதிய கணக்கெடுப்புக்காக படிவம் ஒவ்வொரு வாக்காளருக்கும் கொடுக்கப்படும். சரியாக ஒரு மாதம் மட்டுமே அவகாசம். 6.36 கோடி வாக்காளர்களுக்கு ஒரு மாதத்திற்குள் படிவத்தை கொண்டு சேர்த்து, திரும்பப் பெற வேண்டும். பிறந்த தேதி, ஆதார் எண், கைபேசி எண், தந்தை/பாதுகாவலரின் பெயர், தாய் மற்றும் கணவர்/மனைவியின் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை எண் போன்ற விவரங்கள் கேட்கப்படுகின்றன.

மேலும், 23 ஆண்டுகளுக்கு முன்பு (2002-இல்) நடந்த முந்தைய சிறப்புத் தீவிரத் திருத்தத்தில் இருந்த வாக்காளரின் உறவினர் பெயர் மற்றும் உறவு முறை பற்றிய தகவலும் கூடுதலாகக் கேட்கப்படுகிறது. குறிப்பிட்ட அந்த உறவினர் இறந்திருந்தால், இறப்புச் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும். ஒருவருக்கு ஒரு படிவம் மட்டும்தான். க்யூ.ஆர். கோடு இருப்பதால் அதை பிரிண்ட் செய்தோ, ஜெராக்ஸ் எடுத்தோ மற்றவர் பயன்படுத்த முடியாது.

வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வரும்போது, வாக்காளர் ஒவ்வொருவரும் வீட்டில் இருப்பது கட்டாயம். அவர் ஒவ்வொரு வீட்டுக்கும் குறைந்தது மூன்று முறை சென்று சரி பார்க்க வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. அவ்வாறு அவர் வரும்போது வாக்காளர் இல்லை என்றால், அவருடைய பெயர் சேர்க்கப்பட வாய்ப்பில்லை. கூலி வேலைகளுக்கும் மற்ற வேலைகளுக்கும் செல்வோர் இதற்கான விடுமுறை எடுத்துக்கொண்டு காத்திருக்க வேண்டும்.

மற்ற மாவட்டங்களுக்கும், அண்டை மாநிலங்களிலும் வேலைக்கு சென்றோர் அவசர அவசரமாக சொந்த ஊர்களுக்கு திரும்ப வேண்டும். வெளிநாடுகளுக்கு வேலைக்கு சென்றவர்கள் தங்கள் வாக்காளர் உரிமையை தக்கவைக்க வாய்ப்பே இல்லை. எனவே இது வாக்காளர் சிறப்புத் திருத்தம் இல்லை, சிறப்பு நீக்கம் என்றுதான் கருத வேண்டியுள்ளது. இது அப்பட்டமான ஜனநாயகப் படுகொலை.

இந்த வாக்காளர் சிறப்பு நீக்கத்தை முறியடிக்க வேண்டியது அரசியல் கடமை மட்டுமல்ல, சமூகக் கடமையும் கூட. ஏற்கெனவே நாம் பெற்றிருக்கிற ‘ஒரு மனிதருக்கு ஒரு வாக்கு’ என்ற சம உரிமையைத்தக்க வைப்பதற்கான போராட்டமும் கூட.

# பா.ஜ.க. ஆட்சியால் இந்தியாவுக்கு தலைகுனிவு!

*"உலக நாடுகளில் இந்தியாவையே தலை குனிய வைக்கும் அவமானம் மத்தியப் பிரதேச மாநிலம் இந்தூரில் நடந்திருக்கிறது”.*

*சர்வதேச பெண்கள் கிரிக்கெட் போட்டியில் விளையாடுவதற்கு வந்த இரண்டு ஆஸ்திரேலியப் பெண்கள் பட்டப் பகலில் அவர்கள் தங்கி இருந்த ஓட்டலின் அருகிலேயே வன்முறைக் கும்பல்களால் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். சர்வதேச விளையாட்டுப் போட்டியில் இந்தியாவின் பாதுகாப்பை நம்பி விளையாட வந்த பெண்களுக்கு இப்படி ஒரு நிலை ஏற்பட்டது, உலக நாடுகளில் இந்தியாவிற்கு தலைகுனிவை ஏற்படுத்தியுள்ளது.*

*ஏற்கெனவே அமெரிக்கா, பிரிட்டன், கனடா மற்றும் ஆஸ்திரேலியா நாடுகள் இந்தியாவிற்குப் பயணம் செய்வது பெண்களுக்கு ஆபத்து நிறைந்தது என்று எச்சரித்து வரும் நிலையில், இந்த சம்பவம் நிலைமையை மிகவும் மோசமாக்கி விட்டது. சர்வதேச விளையாட்டுப் போட்டியை நடத்தும் ஒரு மாநிலம் அதில் பங்கேற்கும் பெண்களுக்கு இப்படி ஒரு பாதுகாப்பற்ற நிலையை உருவாக்கி இருப்பது வெட்கக்கேடானதாகும் என்று ’டைம்ஸ் ஆப் இந்தியா’ தலையங்கம் கூறுகிறது.*

*எதிர்காலத்தில் சர்வதேச விளையாட்டுப் போட்டிகள் நடப்பதற்கான வாய்ப்புகள் கிடைக்குமா என்ற கேள்விக்குறி எழுந்து இருக்கிறது என்றும் அந்தத் தலையங்கம் கூறுகிறது. அகமதாபாத் நகரில் 2030-ஆம் ஆண்டுக்கான சர்வதேச விளையாட்டுப் போட்டிக்கு அனுமதி கேட்கப்பட்டிருக்கிறது.*

*இந்துூர் சம்பவம் இதற்கான அனுமதியைக் கேள்விக்குறியாக்கி விட்டது. பாதுகாப்புக்குப் பொறுப்பேற்க வேண்டிய ம.பி பாஜக ஆட்சி, பெண்கள் ஏன் ஓட்டலை விட்டு வெளியே வந்தார்கள் என்று பொறுப்பேற்காமல் கேட்கிறது. குற்றவாளியை உடனே கைது செய்ய விட்டோம் என்று பத்திரிகைகளில் விளம்பரம் தருகிறது. தமிழ்நாட்டில் சர்வதேச விளையாட்டுப் போட்டிகள் மிகவும் எச்சரிக்கையோடும் பாதுகாப்போடும் வெற்றிகரமாக நடந்து முடிந்துள்ளன.*

*அண்ணா பல்கலைக்கழகத்தில் நடந்த ஒரு பாலியல் வன்முறை சம்பவத்தை முன்வைத்து பெண்களுக்கே பாதுகாப்பு இல்லை என்று கூச்சலிட்டு அரசியல் ஆக்க முயன்றவர்கள்; பாஜக ஆட்சியில் நடந்த இந்த சர்வதேச அவமானத்திற்கு என்ன பதிலை கூறப் போகிறார்கள்?”*

# திராவிட மாடல்தான் பீகாரிகளையும் பாதுகாக்கிறது!

*திமுக ஆட்சி நடத்தும் தமிழ்நாட்டில் பீகாரிகளுக்கு எதிராக திமுகவினரால் துன்புறுத்தல் நடக்கிறது என்ற மோடியின் பேச்சு., அவரது பதவிக்கு உரிய பண்பாடுஅல்ல என்று தமிழ்நாடு முதலமைச்சர் எடுத்துரைத்துள்ளார்.*

*பாஜக ஆட்சியோடு முதல்வருக்கு முரண்பாடுகள் இருந்தாலும் கூட சர்வதேச விளையாட்டு போட்டியானாலும், கலைஞர் நாணய வெளியீட்டு விழாவானாலும் பிரதமரையும் மத்திய அமைச்சரையும் அழைக்க வேண்டிய கடமையை உணர்ந்து தனது முதல்வர் பதவிக்குரிய பண்பை வெளிப்படுத்தியவர் தமிழ்நாடு முதல்வர்.*

*தமிழ்நாட்டில் தாங்கள் துன்புறுத்தப்படுவதாக பீகாரிகள் ஏதாவது பிரதமரிடம் முறையிட்டார்களா? பீகார் அரசு குற்றம் சாட்டியதா?*

*பீகாரிகளுக்கு தமிழ்நாட்டில் பாதுகாப்பு இல்லை என்று முதலமைச்சருக்கு மோடி ஏதாவது கடிதம் எழுதினாரா?*

*எதுவுமே இல்லை!*

*பீகாரின் தலை விரித்தாடும் வேலையில்லாத் திண்டாட்டமும் வறுமையும் திராவிட மாடல் ஆட்சியை நோக்கி தள்ளிக் கொண்டிருக்கிறது. எந்த திமுகவை மோடி குற்றம் சாட்டுகிறாரோ அந்த திமுக ஆட்சியில் தான் பீகாரிகளுக்கு வேலைவாய்ப்பும் பாதுகாப்பும் கிடைக்கிறது. பீகாருக்குக்கும் தமிழ்நாட்டுக்கும் பிரதமராக இருக்கும் ஒருவர் இரண்டு நாட்டு மக்களுக்கும் இடையே மோதல்களை உருவாக்குவது ஒரு பிரதமர் பதவிக்கான தகுதியே இல்லை.*

*இதே போன்று தான் தமிழ்நாட்டில் வடநாட்டுக்காரர்களும் பீகாரிகளும் தாக்கப்படுகிறார்கள் என்ற வதந்தியை முகநூலில் பதிவிட்டு தமிழ்நாட்டில் குழப்பத்தை உருவாக்க முயன்றார்கள். அந்த வதந்தி பேர்வழிக்கும் மோடிக்கும் என்ன வித்தியாசம்?*

*இரண்டு நாட்களுக்கு முன்பு ஐ.நா.வில் பேசிய திமுக மாநிலங்களவை உறுப்பினர் மதிப்புக்குரிய வில்சன், மோடி ஆட்சியில் முரண்பாடுகள் இருந்தாலும் , பெண்கள் மற்றும் பாதுகாப்பில் இந்தியாவைப் பெருமையோடு தான் பேசியிருக்கிறார். திமுகவின் மாநிலங்களவை உறுப்பினருக்கு உள்ள பண்பாடு கூட நாட்டை ஆளும் பிரதமருக்கு இல்லை என்பது வெட்கக்கேடு!*

**விடுதலை இராசேந்திரன்**
**முகநூல் பதிவு**

# சென்னையில் முற்போக்கு புத்தகக் காட்சி

*திமுகவின் பவள விழா நிறைவை அறிவுத் திருவிழாவாக கொண்டாடுவதாக அறிவித்துள்ளது அதன் இளைஞர் அணி. இதனையொட்டி ஆய்வாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், எழுத்தாளர்கள், பத்திரிகையாளர், பல்வேறு அரசியல் கட்சித் தலைவர் என பன்முகப் பார்வையில் திமுகவை விவரிக்கும் 80 கட்டுரைகள் அடங்கிய ‘காலத்தின் நிறம் கருப்பு- சிவப்பு’ என்ற நூல் வெளியீட்டு விழா, ‘இருவண்ணக் கொடிக்கு வயது 75’ இருநாள் கருத்தரங்கம், முற்றிலும் புதிய முயற்சியாக பெரியாரிய- அம்பேத்கரிய- மார்க்சிய பதிப்பகங்கள் மற்றும் நூல் விற்பனையாளர்களை மட்டும் அழைத்து சென்னை முற்போக்கு புத்தகக் காட்சி ஆகிய நிகழ்ச்சிகளை அறிவித்துள்ளனர். நவம்பர் 8 முதல் 16 வரை இந்நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.*

*காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு நூலில் ’சமூக நீதி சாதனை நாயகர் கலைஞர்’ என்ற தலைப்பில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, ’சமூகநீதியை அர்த்தமுள்ளதாக்கும் திராவிட மாடல்’ என்ற தலைப்பில் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், ’அய்யாவை விட்டுப் பிரிந்தாரா அண்ணா?’ என்ற தலைப்பில் கழகத் தோழர் பிரகாசு ஆகியோர் கட்டுரை எழுதியுள்ளனர். சென்னை முற்போக்கு புத்தகக் காட்சியிலும் கழகத்தின் நிமிர்வோம் பதிப்பகம் இடம்பெறுகிறது. முற்போக்கு நூல்கள் வாசிப்பை பரவலாக்கும் இம்முயற்சிக்கு வரவேற்கப்பட வேண்டியது. பகுத்தறிவு நூல்களை வாசிக்கும் பழக்கம் வளரட்டும்.*

# ஜீவாவை சுற்றி எழுப்பப்பட்ட மாய பிம்பம்

## ஜீவாவின் பெரியார் மீதான விமர்சனம் (3)

- கொளத்தூர் மணி

காரைக்குடி அருகே உள்ள **சிராவயலில் காந்தி ஆசிரமத்தை ஜீவா தோற்றுவித்தார்** என்ற செய்தி மிக அழுத்தமாக தமிழ்நாட்டில் பதிய வைக்கப்பட்டுள்ளது.

*02.02.2019 விகடன் இணையதளத்தில் "ஜீவாவின் 22 நூல்களுக்கு மேல் தொகுத்த கே. ஜீவபாரதி சிராவயலில் காந்தி - ஜீவானந்தம் நினைவு இல்லம் அமைக்க வேண்டும் என முதல்வர் எடப்பாடி பழனிசாமி இடம் கோரிக்கை வைத்ததாக" செய்தி காணப்படுகிறது. (முழு உள்ளடக்கங்களைப் பற்றி பின்னர் பார்ப்போம்) அந்த கோரிக்கை இன்றைய அரசால் நடைமுறைப்படுத்தப்படுகிறது. ஜீவா நினைவுக் கட்டடம் ஏறத்தாழ கட்டி முடிக்கப்பட்டு விட்டது. அங்கு ஜீவாவின் சிலை ஒன்றும் வைக்கப்பட இருப்பதாகவும் செய்திகள் உள்ளன.*

*ஜீவா - சிராவயல் - காந்தி ஆசிரமம் என்ற செய்தியின் உண்மைத் தன்மையைக் குறித்து அறிவது தற்போது தேவையாக்கப்பட்டு விட்டது.*

*இந்தக் கட்டுரையின் முன் பகுதியில் குறிப்பிடப்பட்ட இஸ்மத் பாஷாவின் 'ஜீவானந்தம் வாழ்க்கை வரலாறு' (1946) கே.பாலதண்டாயுதம் எழுதிய 'ஜீவா வாழ்க்கை வரலாறு' (1966) ஆகிய நூல்களில்* **சிராவயல் ஆசிரமத்தை ஜீவா தோற்றுவித்தார்** *என்று குறிப்பிடப்பட்டுள்ளது.*

*அடுத்த நூல் தோழர் பொன்னீலன் எழுதிய 'ஜீவா என்றொரு மானுடன்' என்ற நூல் 1982ஆம் ஆண்டு, ஆகஸ்ட் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தாரால் வெளியிடப்பட்டு, அதன் நான்காம் பதிப்பு 2013 டிசம்பரில் அதே நிறுவனத்தால் மீள் வெளியீடு செய்யப்பட்டுள்ளது.*

*"நெல்லை மாவட்டத்தில் சேரன்மாதேவியில் வ.வே.சு. அய்யர் 'பரத்வாஜர் ஆசிரமம்' என்ற ஆசிரமத்தை (தமிழ்க் குருகுல வித்யாலயம்) நடத்தி வந்தார். காந்திய நெறிப்படி நடந்த இந்த ஆசிரமத்தில் பிராமண மாணவர்கள் தனிப்பகுதியில் தனியாக உண்ணுவதைக் கண்ட ஜீவா மனம் வெகுண்டார். ஆசிரமத்தின் ஜாதியப் பாகுபாடுகளுக்கு எதிராக ஈ.வெ.ரா, வரதராஜுலு நாயுடு போன்ற காங்கிரஸ்காரர்கள் ஏற்கெனவே போராட்டத்தைத் தொடங்கி இருந்தார்கள். அவருடன் சேர்ந்து ஜீவா கிளர்ச்சி செய்தார்.*

*பிரச்சனை பெரியதாகி இறுதியில் ஆசிரமமே செயலிழந்தது; ஜீவா காரைக்குடிக்குச் சென்றார்; அங்கு சிராவயலைச் சார்ந்த காசி விஸ்வநாதன் செட்டியாரின் தொடர்பு ஜீவாவுக்கு எட்டியது. அவரது துணையுடனும் பொருள் உதவியுடனும்* **ஜீவா சிராவயலில் காந்தி ஆசிரமத்தைத் தோற்றுவித்தார்.** *அந்த ஆசிரமத்தின் தலைவராக கும்பலிங்கம் பிள்ளையும் பொதுச் செயலாளராக ஜீவாவும் பொறுப்பேற்றனர்.*

*பல ஆண்டுகளுக்கு முன் முதன்முறையாக பூதப்பாண்டி பூதலிங்க சுவாமி கோவிலுக்குள் அழைத்துச் செல்லப்பட்ட தாழ்த்தப்பட்டவரான மண்ணடி மாணிக்கம் ஜீவாவினால் வாலறுக்கப்பட்ட டி.என்.கோபால் போன்றோர் அங்கு ஆசிரியராக இருந்தனர். ஆரம்பத்தில் காங்கிரஸ்காரராக இருந்து பின்னாளில் பிரபல கம்யூனிஸ்ட் தலைவராக ஆன சிபி இளங்கோவும் அங்கே இருந்தார். அங்குதான் ஜீவா தனது 'சொரிமுத்து' என்ற பெயரைத் துறந்து ஜீவானந்தம் ஆனார்.' போன்ற செய்திகள் நூலின் 20, 21ஆம் பக்கங்களில் காணப்படுகின்றன.*

### வரலாறுகளில் குழப்பம்

*இதே தோழர் பொன்னீலன் 2008ஆம் ஆண்டு எழுதிய "பொதுவுடைமையின் முகவரி" ஜீவா என்ற நூலின் செய்திகளைப் பின்னர் பார்ப்போம். அடுத்த நூல் சாகித்திய அகாடமியால் 2002ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டதும் தோழர் டி.செல்வராஜ் அவர்களால் எழுதப்பட்டதுமான "ஜீவானந்தம்" எனும் வாழ்க்கை வரலாற்று நூல்.*

*அதில் "பார்ப்பன அல்லாத மாணவர்களுக்கு சேரன்மாதேவி குருகுலத்தில் தனித்தனியே உணவளிக்கும் முறைக்கு எதிராக நடந்து கொண்டிருந்த சிக்கலைத் தீர்க்க காந்தி சென்னை வந்தார்; எஸ் சீனிவாசய்யங்கார் வீட்டில் சமரச பேச்சுவார்த்தை மூன்று நாட்கள் நடைபெற்றது. காந்திஜி ஒரு சமரச யோசனையை முன் வைத்தார். அதாவது அப்போது உள்ள தேசியப் பள்ளியில் இருக்கும் மாணவர்களுக்குத் தனித்தனியே உணவளிக்கும் முறை நீடிக்க வேண்டும்; புதிதாக சேர்க்கும் மாணவர்களுக்கு ஒரே பந்தியில் உணவளிக்கலாம் என்பதாகும். அந்த ஆலோசனை பெரியாரை ஆத்திரமடையச் செய்தது. ஜீவா அந்த அக்கிரமத்தை எதிர்த்து பரத்வாஜர் ஆசிரமத்திலிருந்து வெளியேறினார்" என்று பக்கம் 26இல் குறிப்பிடப்பட்டுள்ளது.*

> **1927ஆம் ஆண்டு காந்தியடிகள் தனது பெயரால் நடத்திக்கொண்டிருந்த ஆசிரமத்திற்கு விஜயம் செய்தார். அப்போது காந்தியார் ஜீவாவிடம் "உங்களுக்கு எவ்வளவு சொத்து உள்ளது?" என்று கேட்டதோ, அதற்கு ஜீவா "இந்தியாதான் என் சொத்து "என்று சொன்னது பற்றியோ, அதற்கு மறுமொழியாகக் காந்தியார், " இல்லை, இல்லை, நீங்கள்தான் இந்தியாவின் சொத்து" என்று சொன்னதாகவோ எந்தப் பதிவையும் காணமுடியவில்லை. அவை ஜீவா, தோழர் பாலதண்டாயுதத்திடம் சொல்லியதாக மட்டுமே இருக்கமுடியும்.**

*அதே நூலின் 27ஆம் பக்கத்தில் "பரத்வாஜர் ஆசிரமத்திலிருந்து வெளியேறி அங்கிருந்து காரைக்குடி சென்று சிராவயல் கிராமத்தைச் சேர்ந்த காசி விஸ்வநாதன் செட்டியார் உதவியுடன்* **சிராவயல் ஆசிரமத்தை தொடங்கினார்.** *அந்த இந்த ஆசிரமத்தின் தலைவர் கும்புலிங்கம் பிள்ளை; பொதுச் செயலாளர் ஜீவா" என்று கூறுகிறது. 28ஆம் பக்கத்தில் "ஆசிரமத்தின் ஆசிரியர்கள் இளமைக் காலத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஜீவாவின் நண்பர்களாக இருந்தவர்களே. பூதப்பாண்டி மண்ணடி மாணிக்கம், டி.என். கோபாலன், சி.பி. இளங்கோ ஆகியோர் ஆவர்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அடுத்த நூல் தோழர் பசுமை குமார் என்பவரால் எழுதப்பட்டு 2019ஆம் ஆண்டில் ராயப்பேட்டை நக்கீரன் பதிப்பகத்தால் வெளியிடப்பட்ட "ஜீவா 100" என்ற நூலாகும்.*

### அந்நூலின் 19 ஆம் பக்கத்தில் கூறப்பட்டுள்ள செய்திகள்:

*"பரத்வாஜா ஆசிரமத்தில் அப்போது இளம் ஜீவா ஆசிரியர் வேலை பார்த்து வந்தார். அதிலிருந்து விலகி வேறு ஆசிரமம் அமைக்க யோசித்தார். ஜீவா காரைக்குடிக்கு அருகில் சிராவயல் என்ற ஊரில் காசி விஸ்வநாதன் செட்டியார் என்பவர் பொதுநல காரியங்களில் ஈடுபடுபவர். அவரைத் தொடர்பு கொள்ளும்படி சேரன்மாதேவியில் இருந்தவர்கள் ஜீவாவிடம் கூறினர். ஜீவாவும் தொடர்பு கொண்டார். இருவருக்கும் நட்பு வளர்ந்தது சொரிமுத்தாகவும், மூக்காண்டி ஆகவும் இருந்த வந்த ஜீவாவுக்கு காசி விஸ்வநாதன் செட்டியார் உதவி செய்யும் முன் வந்தார்*

*ஜீவா புதியதொரு சமத்துவ ஆசிரமம் அமைக்கும் பணியில் ஈடுபட்டார். நண்பர்களுடன் காரைக்குடி அடுத்த சிராவயல் வந்து சேர்ந்தார். அங்கே* **அவர் உருவாக்கியதுதான் காந்தி ஆசிரமம்.** *அதன் நிர்வாகக் குழுத் தலைவர் கும்பலிங்கம்; பொதுச்செயலாளர் ஜீவா.*

*ஏற்கெனவே குறிப்பிட்டிருந்த 'ஜீவா என்றொரு மானுடன்' என்ற நூலினை 1982ஆம் ஆண்டு எழுதி வெளியிட்ட அதே தோழர் பொன்னீலன் குமரி மாவட்டம், ஆசாரிப்பள்ளம் 'ஒளி வெள்ளம்' பதிப்பகத்தின் வழியாக 2008 மே மாதத்தில் "பொதுவுடைமையின் முகவரி ஜீவா" என்ற நூலினை வெளியிட்டு இருக்கிறார்.*

*அதில் "ஊரில் அவர் இருக்க முடியாத சூழல் ஏற்படுகிறது; நாஞ்சில் நாட்டிடம் விடை பெற்று, அன்றைய தமிழ்நாட்டுக்கு நிரந்தரமாக இடம் பெயர்கிறார். 1926இல் அவர் முதலில் சேர்ந்தது சேரன்மாதேவி பரத்வாஜர் ஆசிரமத்தில். அதன் தலைவர் வ.வே.சு. அய்யர் உணவு உண்ணும் இடத்தில் பிராமணர்களுக்கும் மற்றவர்களுக்கும் செய்திருந்ததைக் கண்டித்து அன்றைய காங்கிரஸ் தலைவர் பெரியார் சமத்துவப் போராட்டத்தைத் தொடங்குகிறார். ஜீவாவும் பெரியாரோடு சேர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு ஆசிரமத்தை விட்டு வெளியேறுகிறார்.* **காசி விஸ்வநாதன் செட்டியார் என்னும் சுதந்திரப் போராட்ட வீரரின் அழைப்பின் பேரில், அவர் காரைக்குடி அருகே சிராவயல் காந்தி ஆசிரமத்தில் அதே ஆண்டு ஆசிரியராகச் சேருகிறார்.** *அப்போது அவருக்கு வயது 20 தான். (உண்மையில் 1926 இல் 1907 ஆகஸ்ட்டில் பிறந்த ஜீவாவுக்கு வயது 19 தான்)*

*மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஜீவாவின் வாழ்க்கை வரலாற்று நூல்களின் ஆசிரியர்கள் அனைவரும் "ஜீவா சிராவயலில் ஆசிரமத்தைத் தோற்றுவித்தார்" என்று கூறியிருப்பது போலவே தோழர் பொன்னீலனும் 1982இல் எழுதிய 'ஜீவா என்றொரு மானுடன்' நூலிலும் எழுதி இருக்கிறார். ஆனால் அதே தோழர் பொன்னீலன் 2008 ஆம் ஆண்டில் எழுதி வெளியிட்டு இருக்கிற 'பொதுவுடைமையின் முகவரி ஜீவா' என்ற நூலில், "காசி விஸ்வநாதன் செட்டியார் என்னும் சுதந்திரப் போராட்ட வீரரின் அழைப்பின் பேரில், அவர் காரைக்குடி அருகே சிராவயல் காந்தி ஆசிரமத்தில் அதே ஆண்டு ஆசிரியராக சேருகிறார்" என்று திருத்திக் கொண்டிருக்கிறார் (ஒருவேளை அவருக்கு கிடைத்த புதிய தகவல்கள் அவ்வாறான திருத்தத்தை மேற்கொண்டு இருக்கக் காரணமாக இருக்கலாம்) என்ற செய்தியை இந்த இடத்தில் சுட்டிக் காட்ட வேண்டியது அவசியமாகிறது.*

*இந்த இடத்தில் 02.02.2019 விகடன் இணையதளத்தில் வெளிவந்த முழு செய்தியையும் பார்த்து விடுவோம்.*

*"சுதந்திரப் போராட்ட வீரர்களான மகாத்மா காந்தி, வ.வே.சு. ஐயர், வ.உ.சி., மறைந்த முன்னாள் முதல்வர் காமராஜர், அவரது அமைச்சரவையில் அங்கம் வகித்த கக்கன் மற்றும் தமிழறிஞர் வ.ரா. போன்ற தமிழக அரசியல் வரலாற்றின் பல்வேறு ஆளுமைகளும் பொதுவுடைமைப் போராளியான ஜீவாவை வந்து சந்தித்த இடம், காரைக்குடி அருகேயுள்ள சிராவயல். இங்கு நிலைகொண்டிருந்த காந்தி ஆசிரமம், இன்றைக்கு முற்றிலும் சிதைந்துபோன நிலையில் முட்செடிகளும், கருவேல மரங்களும், குப்பைகளும் மண்டிக் கிடக்கிறது.*

*தோழர் ப.ஜீவானந்தம் - காந்தியத் தொண்டர், சுயமரியாதை இயக்கப் பற்றாளர், தனித்தமிழ்க் காதலர், பொதுவுடைமைப் போராளி... எனப் பன்முக அடையாளங்களோடு அறியப்பட்ட தூய அரசியல்வாதி. ஜீவா தன்னுடைய 20-ஆம் வயதில் வந்துசேர்ந்த இடம் காரைக்குடி அருகே உள்ள சிராவயல். இன்னும் நேர்க்கியாகச் சொன்னால், சிராவயல் அருகே இருக்கும் மருதங்குடி. அங்கிருக்கும் மூத்த காங்கிரஸ்வாதியான க.திருநாவுக்கரசு, ஜீவா குறித்த சுவாரஸ்யமான தகவல்களைப் பகிர்ந்துகொண்டார்.*

*"மருதங்குடியையும் சிராவயலையும் ஒரு நீண்ட மண்சாலைதான் பிரிக்கிறது.* **காந்தியவாதியான காசி விசுவநாதன் நடத்திய ஆசிரமப் பள்ளியில் ஆசிரியராகப் பணிபுரிய வந்தவர்தான் ஜீவா.** *அங்கு ஆசிரியப் பணிக்கு வந்தபோது சொரிமுத்து என்ற இயற்பெயரில்தான் செயல்பட்டார். சமுதாய மாற்றச் சிந்தனைகளை மக்களிடையே விதைத்தார். தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்குக் காந்தியத்தையும் திருக்குறளையும் இலக்கியங்களையும் பயிற்றுவித்தார். குப்பன், சுப்பன் என்கிற பெயர்களையெல்லாம் கௌதமன், மணிவாசகன், மணித்தொண்டன் எனப் பெயர் மாற்றம் செய்தார். இதற்காகக் காசி விசுவநாதன், ஜீவா இருவருமே நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டிதாயிற்று. காசி விசுவநாதனைச் சுயசாதியிலிருந்தே விலக்கி, பின்னர் ஊரைவிட்டும் வெளியேறச் செய்தனர்.*

*தோழர் ஜீவா அரிவாளால் தாக்கப்பட்டார். இதை, கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் தா.பாண்டியன் பின்னாளில், 'சிராவயல் அளித்த பரிசு' என்று ஜீவா குறிப்பிட்டதாக எழுதுகிறார். அண்ணல் காந்தி அமரர் ஜீவா நினைவுக் குழு சார்பாக வருடந்தோறும் ஜீவாவின் நினைவாக விழா நடத்துகிறோம். சமூகச் சீர்திருத்தவாதியாக வாழ்ந்த ஜீவாவுக்கு, அவர் வாழ்ந்த பகுதியான சிராவயலில் நினைவு இல்லம் அமைக்கப்பட வேண்டும் என்பது ஊர்மக்கள் எல்லோரின் விருப்பம்" என்றார்.*

*தேச விடுதலை, ஜாதிய வேறுபாடுகள், பெண்ணுரிமை, தனித் தமிழ் என முற்போக்கு கருத்துகளை ஏந்தி நடந்த, முன்னத்தி ஏரான ஜீவானந்தத்தை, காந்தி சந்தித்த நிகழ்வு வரலாற்றுச் சிறப்புமிக்கது. தமிழகம் வந்திருந்த காந்தி, அவரைக் காரைக்குடியில்தான் தங்கியிருந்த இடத்துக்கு வரச் சொல்லாது ஜீவா செயலாற்றிய காந்திய ஆசிரமத்திற்கே நேரில் சென்று பார்வையிட்டார். அவரை, தேசத்தின் சொத்து என்று காந்தி குறிப்பிட்டதும் இவ்விடத்தில்தான்."*

*குன்றக்குடி ஆதீனப் புலவர் பரமகுரு அவர்கள் குறிப்பிடும்போது, "ஜீவானந்தம் முழுமையான தலைவராக வாழ்ந்தவர். வாக்கும் வாழ்க்கையும் ஒன்றென வாய்க்கப் பெற்றவர். நேர்மைக்குச் சிகரமான அவரின் மேடைப் பேச்சுகளை முழக்கம் என்றே சொல்ல வேண்டும். குன்றக்குடி அடிகளாரோடு அவரின் பட்டி மண்டபம், இருவரிடையே நிலவிய கருத்தியல் நெருக்கங்களை உணரவைத்தன. ஜீவாவை அடுத்த தலைமுறையினர் கற்க வேண்டும்" என்றார்.*

*அவரின் 22 நூல்களுக்கு மேல் தொகுத்த கே.ஜீவபாரதி, "சிராவயலில் - காந்தி - ஜீவானந்தம் நினைவு இல்லம் அமைக்க வேண்டும்" என முதல்வர் எடப்பாடி பழனிசாமிக்குக் கோரிக்கை கடிதம் எழுதியுள்ளார். அவரிடம் பேசிய போது, "அவர்கள் சந்தித்த வரலாற்றுச் சிறப்புமிக்க இடம், இன்றைக்குப் பொதுக் கழிப்பிட அளவுக்குப் பாழ்பட்டுக் கிடக்கிறது. அந்த இடத்தின் பொறுப்பு தனி நபர்களிடம் இருக்கிறது. அவர்களிடமிருந்து மீட்டு அவ்விடத்தைத் துப்புரவு செய்து ஜீவானந்தத்தின் தியாகத்தைப் போற்றும்வகையில் அரசு நினைவு இல்லம் அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அவரின் நூல்களை அங்குக் காட்சிப்படுத்த வேண்டும். இது, தேசப்பற்று கொண்டிருக்கிற அனைவரின் கோரிக்கை" என்றார்.*

தொடர்ச்சி 4ம் பக்கத்தில்

Posted at Egmore RMS,Pathirika Channel, Chennai-08
date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 licenced to post wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# மடத்துக்குளம், கோவையில் ஜாதி எதிர்ப்புப் பரப்புரை




**திருப்பூர்:** மடத்துக்குளம் - கணியூர் காரத்தொழுவு, துங்காவி பகுதிகளில் 12-10-2025 அன்று மடத்துக்குளம் மாவட்டக் கழகம் சார்பாக தந்தை பெரியார் 147வது பிறந்த நாளை கொண்டாடும் விதமாக, ‘ஜாதி நமக்கு அவமானம்; மனிதம் நமது அடையாளம்’ என்கிற கருத்தை முன்வைத்து தெருமுனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

பெரியாரின் கருத்துக்கள் அடங்கிய துண்டறிக்கை பொதுமக்களிடம் வழங்கப்பட்டது. மடத்துக்குளம் ஒன்றிய தலைவர் கணக்கன் தலைமை தாங்கினார். மடத்துக்குளம் ஒன்றியச் செயலாளர் சிவானந்தம் முன்னிலை வகித்தார்.

கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி, சமூக ஊடகப் பொறுப்பாளர் பரிமளராசன், தீண்டாமை ஒழிப்பு முன்னணி மாநில கொள்கை பரப்புச் செயலாளர் தங்கவேலு, கழக மாவட்டக் குழு உறுப்பினர் பன்னீர்செல்வம், முன்னாள் ஒன்றியச் செயலாளர் விசிக ராஜசேகர், கழக மாவட்டத் தலைவர் முகில் இராசு, மாநகர அமைப்பாளர் முத்து ஆகியோர் உரை நிகழ்த்தினார்கள். கடத்தூர் சரவணன் நன்றி உரையாற்றினார்.

மாநகர துணைத் தலைவர் மாரிமுத்து, திருப்பூர் வடக்கு ஒன்றிய அமைப்பாளர் அய்யப்பன், மடத்துக்குளம் ஒன்றிய அமைப்பாளர் அய்யப்பன், பல்லடம் ஒன்றிய அமைப்பாளர் சண்முகம், தமிழ்நாடு மாணவர் கழகத்தின் பிரதீப், பழனிராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.



கோவை: ‘மனிதம் நமது அடையாளம்; ஜாதி நமக்கு அவமானம்’ என்ற தலைப்பில் 25.10.2025 அன்று கோவை சிவானந்தா குடியுருப்புப் பகுதி பேருந்து நிறுத்தம் அருகில் தெருமுனை பிரச்சார கூட்டம் நடைபெற்றது.

ஜாதித் தீண்டாமை கொடுமைகளுக்கு எதிராகவும், ஆணவப்படுகொலை தடுப்புச் சட்டத்தை கொண்டுவர ஆணையம் அமைத்த மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்தும், வருகிற டிசம்பர் 24 பெரியார் நினைவு நாளில் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் கோவையில் நடைபெறவுள்ள போராட்டம் பற்றியும் தோழர்கள் உரையாற்றினார்.

தமிழ்ப் புலிகள் கட்சியின் பொதுச்செயலாளர் இளவேனில், திமுக பகுதி செயலாளர் டெம்போ சிவா, (தலைமைக் குழு உறுப்பினர்) நிர்மல்குமார், வெங்கட், லோகநாயகி, வழக்கறிஞர் மதிவாணன் திமுக, நிகழ்வில் நவீன், சுதர்சன், சத்தியமூர்த்தி, ஸ்ரீநாத், ஸ்ரீராம், இராஜலட்சுமி, தரணீஸ்வரன் மற்றும் தோழர்கள் கலந்துகொண்டனர். சதீஷ் நன்றி உரையாற்றினார்.

# சிராவயல் ஆசிரமத்தை ஜீவா தான் உருவாக்கினாரா?

3ம் பக்க தொடர்ச்சி..

தன்னலமற்ற தலைவர்களின் வரலாற்றுச் சுவடுகளைப் பாதுகாப்பது நம் கடமை மட்டுமல்ல, பெருமையும்கூட” என்பதே விகடன் இணைய இதழ் கூறும் முழுசெய்தி.

## ஆசிரமத்தை ஜீவாதான் தொடங்கினாரா?

மேலும் இந்த இடத்தில் அனைத்து வரலாற்று நூல் ஆசிரியர்களும் சிராவயல் காந்தி ஆசிரமத் தலைவராகக் குறிப்பிட்டுள்ள கு.கும்பலிங்கம் ஓர் அறிவிப்பினை வெளியிட்டு இருக்கிறார் என்ற செய்தியை குறிப்பிட்டாக வேண்டும். அது ‘குடிஅரசு’ 25.4.1926 ஆம் நாள் இட்ட இதழின் 11ஆம் பக்கத்தில் “வந்தே மாதரம். ஸ்ரீ காந்தி ஆசிரமம், சிராவயல்”என்ற தலைப்பில் ஒரு அறிக்கை வெளியாகி உள்ளது. அவ்வறிக்கை கூறும் செய்திகள் கீழே:

“மகாத்மா காந்தியடிகளின் திருப்பெயர் கொண்டிருக்கும் இவ்வாசிரமம் குரோதன வருஷம் தை மாதம் 29 ஆம் நாள் (‘குரோதன ஆண்டு, தை மாதம், 29ஆம் தேதி’ என்பது பொது ஆண்டுக் கணக்கில் 11.2.1926ஆம் நாளாகும்). சிரா வயலில் ஆரம்பிக்கப்பட்டது. பிறப்பினால் உயர்வு தாழ்வில்லை என்பதே இவ் ஆசிரமத்தில் முக்கிய கொள்கையாகும். தேசியக் கல்வி, குருகுலக் கல்வி, ஒடுக்கப்பட்ட வகுப்பினர்களின் முன்னேற்றம், கதர் அபிவிருத்தி முதலிய விஷயங்களில் இவ்வாசிரமம் உழைக்கும். குருகுல கல்விக்காக மூன்று மாணவர்கள் வந்திருக்கின்றார்கள். ஒருவன் ஆதிதிராவிடர். ஆசிரமத்தின் கொள்கைக்கேற்ப அவனுக்கு சம உரிமை கொடுக்கப்படுகிறது. தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, கணிதம், தேச சரித்திரம், நூற்றல் முதலியன போதிக்கப்படும். உணவு சைவ உணவேயாம். புத்தகம், உணவு முதலிய செலவுக்காக மாதம் ஒன்றுக்கு ரூ.10 மாத்திரம்தான் பெற்றுக்கொள்கிறோம். கானாடுகாத்தான் வை.சு. சண்முகம் செட்டியார் அவர்கள் ஆதிதிராவிட மாணவருக்காக மாதம் பத்து ரூபாய் வீதம் அன்புடன் அளித்து வருகிறார். சுவாமி ஆத்மராம் முதலிய பல பெரியோர்கள் இம்மாதிரி பணம் கொடுத்து பையன்களை அனுப்புவதாக இசைந்திருக்கிறார்கள். ஜாதி பேதம் அற்ற உண்மையான குருகுலக்கல்வி விரும்புபவர்கள் தங்கள் சிறுவர்களை ஆசிரமத்திற்கு அனுப்பி நலம் பெறலாம்.

## இராப் பள்ளிக்கூடம்

நெற்றி வியர்வை நிலத்தில் விழ பகல் காலத்தில் வேலை செய்பவர்களுக்காக இரவு ஆசிரமத்தாரால் தமிழ், ஆங்கிலம், நீதிக்கதைகள் முதலியன போதிக்கப்படுகின்றன. வெள்ளிக்கிழமை தோறும் பஜனை நடைபெறுகிறது.

## ஸ்ரீ காந்தி வித்யாலயம்

**இஃது தன வைசிய நாட்டுக் கல்வி கழகத்தாரால் நடத்தப்படுகிறது**. இதில் 35 ஆதிதிராவிட மாணவ மாணவிகள் போதிக்கப்படுகின்றனர். இவர்களின் படிப்பைப் பார்த்து மகிழ்ச்சியுற்ற நண்பர்கள் பலர், ஆடை, கற்பலகை முதலியன பரிசளித்து வருகிறார்கள். ஸ்ரீ காந்தி ஆசிரமம், ஸ்ரீ காந்தி வித்யாலயம், இராப்பள்ளி க்கூடம் இவைகளை ஸ்ரீமான் கும்புலிங்கம் தலைமை வகித்து நடாத்தி வருகிறார். இவைகளின் பயனாக மருதங்குடி ஆதி திராவிடர்களின் பெரும்பான்மையோரும் கள் குடி விடுத்தனர். மாட்டு மாமிசம் அருந்துவதில்லை. உயர்ந்த ஒழுக்கத்தை அனுஷ்டிக்க வேண்டும் என்ற எண்ணம் அவர்களிடம் தோன்றியிருக்கிறது.

இவ்வாசிரமத்தைப் போற்ற தமிழர்களையும், சிறப்பாக தன வைசிய இளைஞர்களையும் மிகவும் வேண்டுகிறோம். உதவி புரிவோரும், மாணவர்களை அனுப்புவோர்களும் அடியில் காணும் விலாசத்திற்கு அனுப்ப வேண்டுகிறோம்.

**கு.கும்பலிங்கம், ஸ்ரீ காந்தி ஆசிரமம்,**
**சிராவயல், ராமநாதபுரம் ஜில்லா.**

## மாயபிம்பம்

சென்னையிலிருந்து காந்தி நூல் வெளியீட்டு கழகம் காந்தியாரின் நூற்றாண்டு விழாவை ஒட்டி 1969இல் ‘தமிழ்நாட்டில் காந்தி’ என்ற 1031பக்கங்கள் கொண்ட ஒரு நூலினை வெளியிட்டு இருக்கிறார்கள். அதில் காந்தியார் தன் வாழ்நாளில் தமிழ்நாட்டுக்கு வந்திருந்த அனைத்து செய்திகளையும் தொகுத்து வெளியிட்டு இருக்கிறார்கள். அதன் ஆசிரியர் திரு. அ.இராமசாமி பி.ஏ., என்பவர் ஆவார். அந்நூலின் 541ஆவது பக்கத்தில் கீழ்க்கண்ட செய்திகள் பாகனேரி வழி என்ற தலைப்பில் 27.9.1927 அன்று நிகழ்ந்ததாகக் காணப்படுகின்றன. **தன வணிகர் கல்விக் கழகம்** (இக்கல்விக் கழகத்தின் ஆதரவில் பல ஊர்களில் 15, 16 ஆரம்பப் பள்ளிகள் நிறுவப்பெற்று நடைபெற்று வந்தன. இது ஒரு அரசாங்க அங்கீகாரம் பெற்ற நிறுவனம்) **நடத்தி வந்த பள்ளிகளின் ஆசிரியர்கள், மாணாக்கர்கள் சிலர் ப.ஜீவானந்தம்** (பிற்காலத்தில் பொதுவுடைமைக் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவர்) கும்பலிங்கம் ஆகியோர் தலைமையில் காந்திஜியைக் காண வந்தார்கள். [இரண்டு அடைப்புக்குறி செய்திகளும் அந்நூலில் உள்ளவையே] காந்திஜி அவர்களுக்கு சுமார் அரை மணி நேரத்திற்கு மேல் பேட்டி கொடுத்தார். வந்த மாணாக்கர்கள் சிலருடைய குடுமி வளர்ந்து தொங்கிக் கொண்டிருந்தது. காந்தியடிகள் ஆசிரியர்களைப் பார்த்து, “மாணாக்கர்கள் ஏன் இவ்வளவு நீளம் மயிர் வளர்க்க வேண்டும்” என்று கேட்டார். அதற்கு ஜீவானந்தம் “இவர்களெல்லாம் மிகவும் ஏழைகள்; அன்றாடம் உணவு கிடைப்பதே கடினம்; ஆகையால் மயிர் வெட்டிக் கொள்வதற்கு பணம் செலவழிக்க முடிவதில்லை” என்று பதில் அளித்தார். உடனே காந்திஜி ஆசிரியர்களை நோக்கி, “ஆசிரியர் என்றால் பொருள் என்ன?” என்று கேட்டார். “கல்வி கற்றுக் கொடுப்பவன்” என்றார் ஒரு ஆசிரியர். ‘கல்வி மட்டும் தானா ஆசிரியர் கற்றுக் கொடுப்பது? எல்லா வகையிலும் அவர்கள் வாழ்வு செம்மையாக நடைபெற வழிகாட்டுவதல்லவா ஆசிரியனின் பணி” என்று திருப்பினார் மகாத்மா. ஆசிரியர்கள் “ஆம், ஆம்” என்றனர். “அப்படியானால் இந்த மாணாக்கர்களின் தலைமயிர் களைவதையும் ஆசிரியரை மேற்கொள்ளக் கூடாதா?” என்று காந்திஜி கேட்டதும் ஆசிரியர்கள் வியப்பு மேலிட்டவர்களாய் “ஆம் செய்யலாம்” என்று அரை மனதுடன் பதில் அளித்தார்கள். “ஓஹோ, உங்களுக்கெல்லாம் மயிர் களைவது என்பது கௌரவக் குறைவான செயல் என்ற உணர்வு இருக்கிறது போலும். பரவாயில்லை, நானே அந்த வேலையைச் செய்கிறேன்” என்று அவரிடம் கூறிவிட்டு தேவதாஸ் பக்கம் திரும்பி, “தேவதாஸ், கத்தரி முதலியவற்றை எடுத்து வா” என்று உத்தரவிட்டார். உடனே ஆசிரியர்கள் “வேண்டாம் பாபு, நாங்களே அந்தப் பணியை மாணாக்கர்களுக்கு மனப்பூர்வமாகச் செய்கிறோம்” என்றார்கள். காந்திஜியும் மகிழ்ச்சியோடு அதை ஏற்றுக்கொண்டார். “சொல்லிக் கொடுப்பவன் மட்டுமல்லன்; செயலிலும் தாம் சொல்வதை செய்து காட்டுபவனே நல்லாசிரியன்” என்று கூறி ஆசிரியர்களை வாழ்த்தி விடை அனுப்பினார். **(இந்த நிகழ்வுகள் காரைக்குடியில் நடந்தவையாகும்.)**

காந்தியார் ஆசிரியர்களிடம் நடத்திய உரையாடல் இவ்வளவு விரிவாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இச்செய்திகளின் தொடர்ச்சியாக நூலின் 542ஆவது பக்கத்தில் உள்ள செய்திகளையும் பார்ப்போம்.

“நாச்சியார்புரம், சிறாவயல், திருப்பத்தூர் ஆகிய ஊர்களின் வழியாக காந்திஜி மதுரை வந்து சேர்ந்தார் சிறா வயலில் ஆசிரமத்தின் சார்பாக காந்திஜிக்கு வரவேற்புப் படிக்கப்பட்டது. இந்த ஆசிரமம், குருகுலம் நடத்தியதையும், அரிஜன பையன்களுக்காகப் பள்ளி நடத்தியதையும், சுகாதாரத் தொண்டாற்றியதையும் காந்திஜி பாராட்டினார்” என்ற செய்திகள் பதியப்பட்டுள்ளன.

ஆனால், சில ஜீவா வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளதைப்போல “1927ஆம் ஆண்டு காந்தியடிகள் தனது பெயரால் நடத்திக்கொண்டிருந்த ஆசிரமத்திற்கு விஜயம் செய்தார். அப்போது காந்தியார் ஜீவாவிடம் “உங்களுக்கு எவ்வளவு சொத்து உள்ளது?” என்று கேட்டதோ, அதற்கு ஜீவா “இந்தியாதான் என் சொத்து “ என்று சொன்னது பற்றியோ, அதற்கு மறுமொழியாகக் காந்தியார், “இல்லை, இல்லை, நீங்கள்தான் இந்தியாவின் சொத்து” என்று சொன்னதாகவோ எந்தப் பதிவையும் காணமுடியவில்லை. அவை ஜீவா, தோழர் பாலதண்டாயுதத்திடம் சொல்லியதாக மட்டுமே இருக்கமுடியும். அவரது நூலில் குறிப்பிட்டதைத்தான் மற்றவர்களும் தங்கள் நூலில் எடுத்துக் கையாண்டிருக்கலாம்.

மேலும் ‘தமிழ்நாட்டில் காந்தி’ என்ற நூலில் “தன வணிகர் கல்விக் கழகம் (இக்கல்விக் கழகத்தின் ஆதரவில் பல ஊர்களில் 15, 16 ஆரம்பப் பள்ளிகள் நிறுவப்பெற்று நடைபெற்று வந்தன. இது ஒரு அரசாங்க அங்கீகாரம் பெற்ற நிறுவனம்) நடத்தி வந்த பள்ளிகளின் ஆசிரியர்கள், மாணாக்கர்கள் சிலர் ப.ஜீவானந்தம் (பிற்காலத்தில் பொதுவுடைமைக் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவர்) கும்பலிங்கம் ஆகியோர் தலைமையில் காந்திஜியைக் காண வந்தார்கள் என்றுள்ளதையும், 25.4.1926 குடி அரசு இதழில் சிராவயல், காந்தி ஆசிரமத் தலைவர் கு. கும்பலிங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் “ஸ்ரீ காந்தி வித்யாலயம் எனும் உட்தலைப்பில் “இஃது தன வைசிய நாட்டுக் கல்வி கழகத்தாரால் நடத்தப்படுகிறது. இதில் 35 ஆதிதிராவிட மாணவ மாணவிகள் போதிக்கப்படுகின்றனர்” என்ற செய்தியையும் இணைத்துப் பார்த்து சிந்திக்கும் எவராலும் சிராவயல் காந்தி ஆசிரமம், ஜீவாவால் நிறுவப்பட்டது என்பதை ஏற்றுக்கொள்ளவும் முடியாது; ஜீவாவை சுற்றி எழுப்பட்டிருப்பது மாய பிம்பமோ என்று அய்யம் கொள்ளாமலும் இருக்க முடியாது.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : November 07, 2025

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran